## சுருக்கம்

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் – அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகள் மற்றும் சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளிகளில் சத்துணவு பணியாளர்கள் பணி நியமனம் – நியமன நடைமுறைகளுக்கு திருத்தம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை (சஉதி2) துறை

அரசாணை(நிலை) எண்.4

நாள். 06–01–2011.
திருவள்ளுவர் ஆண்டு 2041
மார்கழி மாதம் 22ம் நாள்

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை(நி) எண்.918, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 03–11–1989.
2. அரசாணை(நி) எண்.294, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 21–10–1993.
3. அரசு கடித எண். 31865/சஉதி1/93, நாள் 21–12–1993.
4. அரசாணை (பல்வகை) எண்.33, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 05–02–1993.
5. அரசாணை (நி) எண்.206, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 13–09–1996.

மேலும் படிக்கப்பட்டவை:-

6. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் க.எண்.1259/08 சஉதி1, நாள் 23–09–09.
7. அரசாணை(நி) எண்.142, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 06–07–2010.
8. அரசாணை (நி) எண்.163, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 18–08–2010.

-------

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் செயல்படும் அரசு உதவிபெறும் சிறுபான்மையினர் பள்ளிகள் மற்றும் சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளிகளில் சத்துணவு பணியாளர்கள் பணிநியமனம் குறித்து வெளியிடப்பட்ட ஆணைகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்டவைகளாகும். மேலே எட்டில் படிக்கப்பட்ட அரசாணையில் சத்துணவு பணியாளர் நியமனம் தொடர்பான தகுதிகள் தற்காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இது போன்றே தற்போதைய சூழ்நிலைக்கேற்றவாறு மேலே 1 முதல் 5 வரை படிக்கப்பட்ட ஆணைகளை

126

தொகுத்தும் சில மாற்றங்களை செய்தும் ஆணையிடும் பொருட்டு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மேலே 6ல் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மேற்காணும் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் / சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளிகளில் சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர் பணி நியமனங்களில் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றலாம் என முடிவெடுத்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

<u>நியமன அலுவலர்</u>

- சத்துணவு அமைப்பாளர் பணி நியமனத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரே நியமன அலுவலராவார்.
- சத்துணவு சமையலர், உதவியாளர் பணிநியமனத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(சஉதி) அவர்களே நியமன அலுவலராவார்.
- ஒரு பள்ளி சத்துணவு பணியாளர் காலிப்பணியிடத்தை பணி மாறுதல் மூலமோ அல்லது பதவி உயர்வு மூலமோ அல்லது நேரடி நியமனம் மூலமோ நிரப்ப நியமன அலுவலர்களுக்கே முழு அதிகாரமும் உள்ளது.

<u>நியமன நடைமுறை:-</u>

<u>அரசு உதவிபெறும் சிறுபான்மையோர் பள்ளி சத்துணவு மையம்:-</u>

- சத்துணவு அமைப்பாளர், சமையலர், உதவியாளர் பணி நியமனத்திற்கு மாவட்டங்களில் ஊரகப்பகுதிகளுக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர், நகர்புறங்களுக்கு நகராட்சி / மாநகராட்சி ஆணையர் காலிப்பணியிடங்களுக்கான விவரங்களை விளம்பரப்படுத்தி விண்ணப்பங்களை பெற்று கூர்ந்தாய்வு செய்து தகுதி பெற்ற நபர்களை பட்டியலிட்டு நேர்காணல் நடத்த வேண்டும். நேர்காணலில் தகுதியின் அடிப்படையில் பட்டியலிட்டு பின்னர் சம்பந்தப்பட்ட பள்ளியின் தாளாளர்/தலைமையாசிரியர் அவர்களை வரவழைத்து அப்பட்டியலை பார்வையிட அனுமதிக்க வேண்டும். பட்டியலை பார்வையிட்ட 5 வேலை நாட்களில் அப்பட்டியலில் உள்ள ஐந்து நபர்களை பள்ளி நிர்வாகம் பரிந்துரை செய்யலாம். சத்துணவு அமைப்பாளர் பணி நியமனத்தில் மேற்காணும் முறையை பின்பற்றி பள்ளி தாளாளர் / தலைமையாசிரியர் பரிந்துரை செய்த ஐந்து நபர்களில் ஒருவருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களாலும்; சமையலர், மற்றும் உதவியாளர் நியமனத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) அவர்களாலும் பணி நியமன ஆணை வழங்கப்படவேண்டும்.
- சிறுபான்மையினர் பள்ளிகளில் உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் (ம) உதவியாளர் பணியிடங்களுக்கு இனச்சுழற்சி முறை கடைபிடிக்க தேவையில்லை.

<u>அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளி சத்துணவு மையம்:-</u>

- அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளி சத்துணவு மைய பணியாளர் நியமனத்திற்கு அரசு ஆணை (நிலை) எண். 163, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 18.08.2010இல் வெளியிடப்பட்டுள்ள ஆணை மற்றும் இனச்சுழற்சி குறித்த அரசாணை (நிலை) எண்.142, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை, நாள் 06-07-2010ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளையும் பின்பற்றவேண்டும். அதாவது அரசு / உள்ளாட்சி பள்ளி மைய (ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி / மாநகராட்சி) சத்துணவு



136

பணியாளர்கள் நியமனம் போன்றே சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளி சத்துணவு பணியாளர்(அமைப்பாளர், சமையலர் (ம) உதவியாளர்) நியமனம் மேற்கொள்ள வேண்டும்.

3) மேலே பத்தி இரண்டில் அரசு உதவிபெறும் சிறுபான்மையினர்/ சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளிகளில் சத்துணவு பணியாளர்கள் நியமனங்களில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் மேலே படிக்கப்பட்ட 1 முதல் 5 வரை வெளியிடப்பட்டுள்ள ஆணைகளுக்கு தேவையான திருத்தங்கள் செய்யப்படுகிறது.

4) இவ்வாணை வெளியிடப்படும் நாளுக்குப் பின்னர் அரசு உதவிபெறும் சிறுபான்மையினர் / சிறுபான்மையினர் அல்லாதோர் பள்ளிகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து சத்துணவு மைய பணி நியமனங்களிலும் இந்த ஆணையை பின்பற்றி நியமனம் செய்யப்படவேண்டும்.

5) சமூக நல இயக்குநர் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த ஆணையினை கண்காணிப்பு மற்றும் ஆய்வு அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மோகன் பியாரெ
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், சமூக நலத்துறை, சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி,சென்னை–3.
தலைமை அரசுத் துறை நிறுவனத் தணிக்கையர், சென்னை–2.

நகல்

முதன்மைச் செயலாளர்/ சிறப்பு ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113.
நிதி (சமூக நலம்) துறை, சென்னை–9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சந.7) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்